வெற்றிக்கு வித்திடும்.. ‘மக்களுடன் ஸ்டாலின்’ செயலி!

சென்னை,ஏப்.3-

பெரும் சமூக மாற்றத்தை நிகழ்த்தி வரும் திராவிட மாடல் அரசின் திட்டங்களையும், திராவிட இயக்க தலைவர்களின் சாதனைகளையும், எப்போதும் மக்களுடன் களத்திலிருந்து போராடும் கழகத்தின் களப் பணிகளையும் பொதுமக்களுடன் கொண்டு சேர்க்கும் நோக்கில் தி.மு.கழகத்தின் சார்பின் “மக்களுடன் ஸ்டாலின்” செயலி உருவாக்கப் பட்டுள்ளது.

கடந்த செப்டம்பரில் 17ம் தேதி அன்று வேலூரில் நடந்த முப்பெரும் விழாவில் பெருந்திரளாகத் திரண்டிருந்த உடன்பிறப்புகள் முன்னிலையில் ‘மக்களுடன் ஸ்டாலின்’ செயலி அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றே ஆயிரக் கணக்கான உடன்பிறப்புகள் ‘மக்களுடன் ஸ்டாலின்’ செயலியை பதிவிறக்கம் செய்தனர்.

ஆடுகளம்

களத்திலும் இணையதளத்திலும் சிறப்பாக தேர்தல் பணியாற்றும் கழகத்தினரை அடையாளம் கண்டு அவர்களை ஊக்குவிக்க மக்களுடன் ஸ்டாலின் செயலியில் ஆடுகளம் எனும் புது பகுதி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியின் மூலம், ட்ரெண்ட் செய்வது, இல்லம் தோறும் சென்று பிரச்சாரம் மேற்கொள்வது, பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்வது என எந்தெந்த கழகப் பணிகளை எல்லாம் மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்த அறிவிப்புகள் இந்த செயலியில் வரும். அந்த கழகப் பணிகளில் எல்லாம் யார் சிறப்பாக செயல்படுகிறார்களோ அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு பரிசுகளும் வழங்கப் படப்படவுள்ளது.

‘ப்ராட்காஸ்ட்’

கழக நிர்வாகிகளையும், தொண்டர்களையும் இணைக்கும் ஒரு சிறப்பம்சம் தான் ப்ராட்காஸ்ட் செயலி. இத்தகைய அம்சத்தின் மூலம் தலைமை கழக நிர்வாகிகள் பகிர நினைக்கும் தகவல்களை மாவட்ட செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடங்கி கழக உடன்பிறப்புகள் வரை அனைவரையும் அனைவரையும் எளிதாகவும் விரைவில் சென்று சேரும் வகையில் ப்ராட்காஸ்ட் பகுதி உருவாக்கப் பட்டுள்ளது.

இதன் மூலம் கழகத் தலைவர் அவர்கள் தொண்டர்களுடன் நேரடியாக போன் செய்து பேசும் வகையில் இந்த செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் எளிதாகவும் உடனடியாகவும் கழகப் பணிகளையும், செய்திகளையும் அனைவரிடமும் சென்றடைய செய்கிறது.

எல்லோருக்குமான திட்டங்களை அறிய அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியே சமூகநீதி என்ற உயர்ந்த நோக்கோடு, எல்லோருக்கும் எல்லாமும் கிடைத்திட பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ அரசு.

குழந்தைகள், முதியோர், பெண்கள், பட்டதாரிகள், இளைஞர்கள் என அனைத்து தரப்பினரும் அவர்களுக்கான திட்டங்களை ஒரே இடத்தில் அறிந்து கொள்ளும் வகையில் மக்களுடன் ஸ்டாலின் செயலியின் திட்டங்கள் பகுதி உருவாக்கப்பட்டுள்ளது.

பள்ளிக்கு மாணவர் வருகையை அதிகரித்த ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’, பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை நீக்கிய ‘அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்’ திட்டம், மகளிர் முன்னேற்றத்திற்கு ஏணியாக அமைந்த ‘விடியல் பயணம்’ திட்டம், மாணவிகளின் உயர் கல்வி கனவுகளுக்குச் சிறகு அளித்த ‘புதுமைப் பெண்’ திட்டம் என திராவிட மாடல் அரசின் முன்னெடுப்புகள் அனைத்தும் முதன்மைத் திட்டங்களில் இடம் பெற்றுள்ளது.

இந்தத் திட்டங்களை அனைத்துத் தரப்பு மக்களிடமும் எடுத்து சொல்ல வேண்டியது கழக உடன்பிறப்புகளின் தேர்தல் பணிகளில் முதன்மையானது.

தொகுதிகளும் வளர்ச்சிப் பணியும்!

மக்களின் குறை நீக்க கொடுத்த வாக்குறுதிகளுக்கெல்லாம் செயல் வடிவம் கொடுக்கும் பணி அனைத்து தொகுதியிலும் நடந்து வருகிறது. சட்டமன்ற தொகுதிகள் தோறும் திராவிடமாடல் ஆட்சி அமைந்ததிலிருந்து கொண்டு வந்த திட்டப்பணிகளை அறிந்து எடுத்துச் சொல்லி, தேர்தல் பரப்புரையில் ஈடுபடும் கழக உடன்பிறப்புகளுக்குப் பெரிதும் உதவிடும் வகையில் ‘உங்கள் தொகுதியைத் தெரிந்து கொள்ள?’ பகுதி அமைந்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளிலும் திராவிட மாடல் அரசு மேற்கொண்டுள்ள வளர்ச்சி பணிகளின் பட்டியலை எளிமையாக அனைவரின் கரங்களுக்கும் கொண்டு சேர்த்துள்ளது மக்களுடன் ஸ்டாலின் செயலி.

சாதனை சொல்வோம்

இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பையும், தமிழ்நாட்டிற்கான பொருளாதார மேம்பாட்டையும் ஊக்குவிக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணம் உள்ளிட்ட அன்றாட முன்னெடுப்புகள், ஊடகங்களில் திராவிட மாடல் அரசின் செயல்பாடுகளைப் பாராட்டி வரும் செய்திகள், கழகத் தலைவரின் சமூக வலைத்தள பதிவுகளையும், சாதனை சொல்லும் காணொலிகளும் உடனுக்குடன் ஒரே தளத்தில் உடன்பிறப்புகள் தெரிந்துகொள்ளும் வகையில் இந்த செயலியில் அமைந்துள்ளது.

கழகத்தின் இந்தச் சாதனைகளை அன்றாடம் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்பது கழக உடன்பிறப்புகளின் கடமை. நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் நிலையில் ‘மக்களுடன் ஸ்டாலின்’ செயலி கழகத்தின் தேர்தல் வெற்றியை தீர்மானிக்கும் மகத்தான கருவி எனவே உடன்பிறப்புகள் உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

சொன்னதைச் செய்கிறது கழகம், கழகம் செய்ததை மக்களிடம் கொண்டு சேர்ப்போம். வாருங்கள் உடன்பிறப்பே ‘மக்களுடன் ஸ்டாலின்’ செயலியைப் பதிவிறக்கம் செய்து வலைத்தளம் முழுவதும் கழக அரசின் திட்டங்களையும், கழகத் தலைவரின் முன்னெடுப்புகளையும் கொண்டு சேர்ப்போம்.

இவ்வாறு தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கழகத்தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணியின் வெற்றி வேட்பாளர் துரை வைகோவை ஆதரித்து, புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் கீரனூர் பகுதியில் தீப்பெட்டி சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர். உடன் கே.ஆர்.என்.போஸ், ஓ.எஸ்.வெங்கடாச்சலம், குளவாய்ப்பட்டி சி.சண்முகம். ஆ.ராஜேந்திரசோழன், எம்.ஏ.எம். இம்தியாஸ், க.வீரய்யா, வி.எஸ்.பழனி, டாக்டர் செ. குறிஞ்சிவாணன், விளாப்பட்டி சிவா, வழக்கறிஞர் சின்னத்துரை மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

திருவண்ணாமலை, ஆரணி நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர்கள் சி.என்.அண்ணாதுரை, எம்.எஸ்.தரணிவேந்தனை ஆதரித்து

முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று சிறப்புரை!

கீழ்பென்னாத்தூர் தொகுதி – சோ.காட்டுக் குளத்தில் நடைபெறுகிறது!

திருவண்ணாமலை, ஏப்.3-

திருவண்ணாமலை, ஆரணி நாடாளுமன்றத் தொகுதி, ‘இந்தியா’ கூட்டணியின் கழக வேட்பாளர்கள் சி.என்.அண்ணாதுரை, எம்.எஸ்.தரணிவேந்தன் ஆகியோரை ஆதரித்து, இன்று மாபெரும் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகிறார்.

இன்று (03.04.2024 - புதன் கிழமை) மாலை 5.00 மணிக்கு, திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் தொகுதி, சோமாசிப்பாடி அருகில் உள்ள சோ.காட்டுக்குளத்தில் திருவண்ணாமலை, ஆரணி நாடாளுமன்றத் தொகுதி, இந்தியா கூட்டணியின் கழக வேட்பாளர்கள் சி.என்.அண்ணாதுரை, எம்.எஸ்.தரணிவேந்தன் ஆகியோரை ஆதரித்து, மாபெரும் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்திற்கு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமை வகிக்கிறார்.

சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி, அ.நல்லதம்பி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு, கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரை ஆற்றுகிறார்.

பொதுக்கூட்டத்தில் திருவண்ணாமலை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர்கள் செங்கம் குமார், ச.பிரபு, மதிமுக மாவட்டச் செயலாளர்கள் சீனி.கார்த்திகேயன், வ.கண்ணதாசன், திராவிடர் கழகத் தலைவர்கள் சி.மூர்த்தி, கே.சி.எழிலரசன், மார்ச்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர்கள் இரா.தங்கராஜ், எம்.சுந்தரேசன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி மாவட்ட செயலாளர்கள் ஐ.எம். சுலைமான், எஸ்.டி.நிஷார் அகமத், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர்கள் ச.நியூட்டன், ப.வளர்மதி, சி.ஓம்பிரகாஷ், மக்கள் நீதி மய்யம் மாவட்ட செயலாளர் இரா. அருள், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர்கள் ஏ.ஆர்.நாசர் உசேன், டி.இக்பால் அகமத்,

மனிதநேய ஜனநாயக கட்சி மாவட்ட செயலாளர்கள் எச்.அமீர்கான், ஜமா, விவசாய தொழிலாளர்கள் கட்சி மாவட்ட தலைவர் பி.வாசு, தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாவட்ட செயலாளர்கள் மல்லிவினோத், கே.பாலாஜி, ஆதிதமிழர் பேரவை மாவட்ட செயலாளர்கள் ஆர்.அதியவளவன், இரவி, யாதவ மக்கள் இயக்கம் தலைமை ஒருங்கிணைப்பாளர் கு.ராஜாராம், தலித் விடுதலை இயக்கம் என்.ஏ.கிச்சா, எம்.ஜி.ஆர். கழகம் கே.டி.அன்பழகன்

ஆரணி நாடாளுமன்றத் தொகுதி கூட்டணி இயக்க மாவட்ட காங்கிரஸ் செயல் தலைவர்கள் ரங்கபூபதி, எஸ்.பிரசாத், ஆர்.பி. ரமேஷ், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழக துணை செயலாளர் ஏ. கே.மணி, மாவட்ட செயலாளர்கள் எஸ்.கே.ரத்தினகுமார், வி.கே.சுதாகர், பாபு கோவிந்தராஜ், மார்ச்சிஸ்ட் கம்யூனிட் கட்சி ஆர்.ராமமூர்த்தி, என்.சுப்பிரமணி, ஏ.வி.சரவணன், சவுரிராஜன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர்கள் ந.முத்து, ஆ.மதியழகன், ஏ.தனஞ்செழியன், அசுரவடிவேல், டி.திலீபன், திராவிடர் கழக மாவட்ட தலைவர் ஆ.இளங்கோவன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி மாவட்ட தலைவர்கள் டி.எம்.பீர்முகமது, ஏ.அப்துல் வகாப், சையத் மஜீர்பாபு, மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர்கள் ஏ.நசீர் அகமத், எஸ். சையத் உசேன், மக்கள் நீதி மய்ய மாவட்ட செயலாளர் எஸ்.சுரேஷ், தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாவட்ட செயலாளர்கள் ஜெ.மோகன், ம.கோபாலன், யாதவ மக்கள் இயக்க தொகுதி பொறுப்பாளர் ஏ.எழிலரசன், விவசாய தொழிலாளர்கள் கட்சி மாவட்ட தலைவர் குருமுத்து, ஆதித் தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் ஏ.காசி, தலித் விடுதலை இயக்க மாவட்ட பொருளாளர் எஸ்.சிவக்குமார்,

திருவண்ணாமலை நாடாளுமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் டாக்டர் மாலதி நாராயணசாமி, எஸ்.டி. இசை, தாமரைகண்ணன், ஜெயகாந்த்பாரதி, ஆர். வசந்த்குமார், ஏ.சி.தேவகுமார்,

ஆரணி நாடாளுமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் தி.அ.முகமதுசகி, ஆர்.டி. அரசு, வேளைச்சேரி மணி மாறன், முனிவேல், சி. ஜெரால்டு, தி.அன்பழகன் மற்றும் தோழமை இயக்கங்களின் நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

நிறைவாக கீழ்பென்னாத்தூர் ஒன்றியச் செயலாளர் ஆராஞ்சி ஆறுமுகம் நன்றி கூறுவார்.

பொதுக்கூட்ட ஏற்பாடுகளை திருவண்ணாமலை, ஆரணி நாடாளுமன்றத் தொகுதி தேர்தல் பணிக் குழுவினர் செய்து வருகின்றனர்.

ஒடுக்கப்பட்டோர் – சிறுபான்மையினர் – மகளிர் உரிமை சார்ந்த

“இந்தியா” கூட்டணியை வெற்றி பெறச் செய்வீர்!

91 வயதில் தந்தை பெரியார் வழியில் புறப்படுகிறேன்! திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஏப். 3-

1948 முதல் வரும் தேர்தல் வரை 18 தேர்தல்களில் பிரச்சாரம் செய்த அனுபவம் உள்ள நான், 95 வயதிலும் பிரச்சாரம் செய்த தந்தை பெரியாரின் தொண்டன் என்ற முறையில், இந்த 91 ஆம் வயதிலும் தேர்தல் பிரச்சாரத்திற்குப் புறப்படுகிறேன் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

நேற்று (2.4.2024) மாலை முதல் 18 ஆவது மக்களவைத் தேர்தலுக்கான எனது பரப்புரை தென்காசி (தொகுதியிலிருந்து தொடங்கியது.

1952 இல் முதல் தேர்தல் என்று கணக்கிட்டு, நாடு சுதந்திரம் அடைந்து பிரிட்டிஷ் ஆட்சி வெளியேறிய காலக் கணக்குத்தான் இந்த 18 ஆவது தடவை தேர்தல்.

ஆனால், அதற்கு முந்தைய 1947 1948 தேர்தல் காலத்திலிருந்து, எனது மாணவப் பருவம் தொட்டே எங்கள் ஊர் கடலூரிலிருந்து, திராவிடர் கழகத்தின் தொண்டன் என்கிற தன்மையில் மஞ்சள் பெட்டி, “பச்சைப் பெட்டி” என்று வாக்களித்த தேர்தல்களையும் கண்டு, உள்ளூரில் பங்கேற்ற அனுபவம் உண்டு.

இப்போது நடைபெறவிருக்கும் இந்த 2024 தேர்தல் வெறும் பதவிக்கான தேர்தல் அல்ல. கொள்கைப் போராட்டத்திற்கான தேர்தல் அறப்போர் ஆகும்!

முந்தைய நெருக்கடி காலம் முடிந்து 1977 இல் நடைபெற்ற ‘மிசா’ கைதிகளாகி, விடுதலை பெற்று நாட்டின் முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் விடுதலை பெற்று, பிரதமர் யார் என்று யாரையும் அடையாளம் காட்டி, வாக்குச் சேகரிப்பு நடைபெறாமல் நடைபெற்ற அத்தேர்தல், நெருக்கடி கால (எமர்ஜென்சி) அச்சம் முழுமையாக நீங்காத நிலையில், மவுனம் காத்த மக்கள், நெருக்கடி நிலை பிரகடனம், எதிர்க்கட்சித் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு விடுதலையான பிறகும்கூட, வாக்குச் சீட்டையே ஜனநாயகப் பாதுகாப்பு போராயுதமாக்கி அன்றைய ஆட்சியிலிருந்த பிரதமர் இந்திரா காந்தி ஆட்சியை மாற்றிக் காட்டியது.

முன்பு உணராதவர், அவர், தான் எடுத்த நிலைக்கு, சென்னை கடற்கரையில் நடந்த கூட்டத்திற்குப் பின், தேர்தலில் பகிரங்க அறிவு நாணயத்துடன் வருத்தம் தெரிவித்தார்.

வரலாறு இப்படி பல திருப்பங்களை நாளும் ஏற்படுத்தி வருகிறது!

நெருக்கடி காலத்தை வெளிப்படையாக அறிவித்து, பலரை ‘மிசா’வில் கைது செய்து சிறையில் அடைத்தாலும்கூட, அதை வெளிப்படையாக, அறிவு நாணயத்திற்குக் குறைவில்லாமல், நெருக்கடி காலத்திலும், ஒரு தேர்தல் ஆணையத்தினை தன்வசமாக்கி அவர் அந்த 1977 ஆம் ஆண்டு தேர்தலை நடத்தவில்லை!

ஆனால், கடந்த 10 ஆண்டுகளாக நடைபெறும் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. ஆட்சி பிரதமர் மோடி அரசு, முந்தைய நெருக்கடி காலத்தில் தாங்கள் பாதிக்கப்பட்டதைக் கூட வசதியாக மறந்துவிட்டு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஆட்சியை நடத்தாமல் அதன் அய்ந்து முக்கிய தத்துவங்களை

1. மக்களின் இறையாண்மை, 2. சமதர்மம், 3. மதச்சார்பின்மை, 4. ஜனநாயகம்

5. குடியரசு - குடியாட்சி என்பவற்றை இந்த 10 ஆண்டுகளில் பறிமுதல் செய்த ஆட்சியாக ஆக்கி, கூட்டாட் சித் தத்துவத்தை ஒரு புதுப் பெயர் Cooperative Federation கூட்டுறவு கூட்டாட்சி என்று கூறி, நடைமுறை ஒன்றை ஒன்றிய அரசு ஆட்சி என்றே மாநிலங்களின் அடிப்படையையே காணாமற் செய்துவிட்டு, ‘அடிப்படை உரிமைகள்’ என்ற முக்கிய பகுதி செல்லரிக்கப்பட்ட சீர்கேட்டிற்கு ஆளாகி, பேச்சுரிமை, கருத்துரிமை காணாமற்போய் எதேச்சதிகார மன்னர்களின் ராஜ்ஜியம்போல ஆட்சியின் மூன்று முக்கிய தூண்கள் சிதையும் நிலை வெளிப்படையாகவே அரங்கேற்றப்பட்டு வருகிறது.

1. நிர்வாகம் ஆளுமை (Executive), 2. நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் (Legislative), 3. நீதித் துறை உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற தீர்ப்புகளை மதியாமை, நியமனங்கள் ஒருதலைப்பட்சம், 4. நான்காவது தூண் என்று அழைக்கப்படும் ஊடகங்கள் (அ) அதன் பெருமுதலாளிகள்மூலம் தன்வயப்படுத்துதல் அல்லது (ஆ) அச்சுறுத்தப்படுதல் என்பவை.

இப்படி பல்துறை உரிமைகள் பகிரங்கமாகப் பறிப்பு நடைபெறும் அபாயம் உச்சகட்டத்தில்!

எதிர்க்கட்சிகளின் குரல்வளை நெரிப்பு!

எதிர்க்கட்சிகளின் குரல்வளை நெரிக்கப்படும் (திரிசூலங்கள்)

1. வருமான வரித் துறை, 2. சி.பி.அய், 3. அமலாக்கத் துறை

இந்த முப்பெரும் கூர்முனை ஜனநாயகத்தின் குரல் வளையை குத்திக் கிழித்துக்கொண்டே உள்ளது!

‘இம்மென்றால் சிறைவாசம்! ஏனென்றால் வனவாசம்’ என்பதை நாட்டில் உள்ள கட்சி சார்பின்றி அறிவு ஜீவிகளையும்கூட அச்சத்திற்கு ஆட்படுத்தி, எங்கே நமக்கும் “நகர்ப்புற பயங்கரவாதிகள்” (Urban Naxal) என்று குறிப்பிட்டு, எதேச்சதிகாரத்தின் சவுக்கால் வதைபடும் கொதிநிலை ஏற்பட்டுவிடுமோ என்ற அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

1. ஆட்பலம் (Muscle Power), 2. பண பலம் (Money Power), 3. ஊடக பலம் (Media Power)

பிரிவினைவாதம் என்று பழி சுமத்துவதா?

எதிர்க்குரல் கேட்டால், பயங்கரவாதம், பிரிவினைவாதம், ஊழல் பேர்வழிகள் என்ற பழியை வீச்சரிவாள்போன்று பேசி, வீசும் கொடுமை! இதை மக்களின் அறிவு சாதுரியம் வீழ்த்திவிடுவது உறுதி!

இவற்றை வீழ்த்தவே முடியாதா என்று ஏங்கும் முன்பு மாற்றத்திற்காக வாக்களித்த, இளைஞர்கள், விவசாயிகள், மகளிர் இந்த 10 ஆண்டுகளில் சந்தித்த ஏமாற்றங்களை உணரும் நிலை தென்னாட்டில் மட்டுமல்ல; இந்தியா முழுவதும் பளிச்சிட்டு, கீழ்வானம் வெளுக்கத் தொடங்கிய நிலையில்தான், உண்மையான இரண்டாம் சுதந்திர ஜனநாயகக் காப்பு அறப்போராக கத்தியின்றி, ரத்தமின்றி, யுத்தம் ஒன்று பொதுத் தேர்தலாக அமைதியான ஒரு விரல் அமைதிப் புரட்சியாக நடைபெறுகிறது!

எனவே, அச்சத்தைப் புறந்தள்ளி, அற்ப ஆசைகளை ஒதுக்கி, இன்றைய தலைமுறை மட்டுமல்ல இனி வரும் இந்தியத் தலைமுறைகளின் உரிமைகளைக் காக்கவே இந்தப் புதிய அறப்போர்!

இப்போது ஏமாந்துவிட்டால், இனி ஜனநாயகத் தேர்தலில் இதுவே கடைசித் தேர்தல் என்றாகிவிடும் என்பதை நமது ஒப்பற்ற ஆட்சியின் ஜனநாயகப் பாதுகாப்பு அரண் அமைப்பின் காவலரும், இந்தியா கூட்டணிக்கு முகப்புரை எழுதி, “யார் வரவேண்டும் என்பதைவிட, யார் வரக்கூடாது” என்பதே முக்கியம் என்று விளக்கி இந்தியா (INDIA) கூட்டணித் தலைவர்களை ஒருங்கிணைத்து, அக்கூட்டணியில் அகில இந்திய காங்கிரஸ், இடதுசாரிகள், மாநிலக் கட்சிகள் முதலிய 28 கட்சிகளையும் ஓரணியில் திரண்டு, ‘வேற்றுமையில் ஒற்றுமை’ கட்டியுள்ளது புதிய நம்பிக்கையை உறுதியாகத் தோற்றுவித்துள்ளது!

பலவித மாய்மால வித்தைகளைப் புறந்தள்ளி, மக்களே வெற்றி பெறும் நிலை நாளுக்கு நாள் பெருகி வருகிறது!

ஆளும் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். மோடி ஆட்சியின் பொய் முகத்தைப் புரிந்துகொண்டு, ஒதுங்கவேண்டியவர்கள் ஒதுங்கிவிட்டார்கள்!

மக்களுக்குப் பரப்புரைமூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே மிகவும் முக்கியம்!

இதில் பல வியூகங்கள் “பா.ஜ.க.வின் B, C, D டீம்கள்” பல உள்ளன!

தேர்தல் பிரச்சாரத்திற்குப் புறப்படுகிறேன்!

எல்லாவற்றையும் தாண்டி, இறுதி வெற்றி இந்தியா கூட்டணிக்கே! காரணம், அது ஒடுக்கப்பட்டோர், சிறுபான்மையினர், பாதிக்கப்பட்டோர், மகளிர் ஆகியவர்களைக் கொண்ட மக்கள் கூட்டணி!

“இப்போது இல்லாவிட்டால், இனி எப்போதும் இல்லை” என்று மக்களுக்கு உணர்த்தவே பரப்புரைப் பயணத்தில் களத்தில் நிற்கும் 91 வயதிலும் துவளாத தொண்டனாகிய நான் களமிறங்குகிறேன். உயிர் முக்கியமல்ல. நாடு முக்கியம்!

இது தலைமுறை மாற்றத்திற்கு ஒரு பெரும் போர் ஜனநாயகம்.

94 வயதிலும் மூத்திரச் சட்டியைத் தூக்கி, முக்கலும், முனகலுடனும் தொண்டாற்றிய தொண்டுப் பழமான தந்தை பெரியாரின் வாழ்நாள் மாணவனான நான், அதை நினைத்தால், புத்தாக்கம் பெறுகிறேன்!

எனவே, புறப்படுகிறேன்! எமக்காக அல்ல! நம் மக்களுக்காக! கட்சிக் கண்ணோட்டமோ, ஆட்சிக் கண்ணோட்டமோ அல்ல! ஜனநாயக மீட்சிக் கண்ணோட்டம் முக்கியம் மக்களே, ஏமாந்துவிடாதீர்கள்!

உங்கள் தொண்டன்,

தேர்தல் பரப்புரையில் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் முனைவர் துரை.சந்திரசேகரன் என்னுடன் பங்கேற்கிறார். மற்ற பல மாவட்டங்களிலும் கழகப் பிரச்சார செயலாளர் வழக்குரைஞர் அ.அருள்மொழி, துணைப் பொதுச்செயலாளர் வழக்குரைஞர் சே.மெ.மதிவதனி, கிராமப்புற பிரச்சார அமைப்பாளர் அதிரடி க.அன்பழகன், தஞ்சை இரா.பெரியார்செல்வன் ஆகியோரும் பல தொகுதிகளில் பங்கேற்கின்றனர்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

‘இந்தியா’ கூட்டணியின், கடலூர் நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் கி.விஷ்ணு பிரசாத்தை, பண்ருட்டி நகரக் கழகச் செயல்வீரர்கள் கூட்டத்தில் அறிமுகப்படுத்தி வைத்து நகரக் கழகச் செயலாளர் கே.இராசேந்திரன் பொன்னாடை போர்த்தி வாழ்த்தினார். எம்.ஆர்.ஆர்.இராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ,, தலைமைச் செயற்குழு வி.கே.வெங்கட்ராமன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆர்.எஸ்.தணிகைசெல்வன், ஆனந்தி, நகர அவைத்தலைவர் ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.